**சக்தி பௌண்டேஷன் -சக்தி மருத்துவப் பகுதி**

**பி.சி.ஓ.எஸ் என்னும் பெண்ணின் ஓவரியில் ஏற்படும் கோளாறு.**

***பி.சி.ஓ.எஸ் என்றால் என்ன?***

பெண்ணின் சினை முட்டை ''ஓவரி'' என்ற இரு உறுப்புகளால் உருவாக்கப்படுகிறது.இந்த ஓவரிகளில் நீர்க் கட்டு ஏற்படும் சிறுசிறு கட்டிகள் ஏற்படுவதுண்டு. இந்த கட்டிகள் நூலில் கோர்த்த முத்துக்கள் போல் காணப்படும்.இதனால் ஓவரிகள் தங்கள் இயற்கையான அளவைவிட சற்றுப் பெருத்துவிடுகின்றன.இதனால் பல்வேறு ப்ரச்சனைகளும் வருகின்றன.

***ஓவரிக்கட்டிகளால் என்ன பாதிப்பு ஏற்படுகின்றது?***
ஓவரிகளில் சினைமுட்டைகள் உருவாகின்றன.முட்டைகள் வளர்ந்ததும் தக்க தருணத்தில் ஃபெலோப்பியன் குழாய்க்கு முட்டை வரும், அங்கே ஆண்விந்துவால் சேர்க்கை உண்டாகி கரு உருவாகும்.ஆனால் இந்த ஓவரிகளில் கட்டிகள் உண்டாவதால் முட்டை ஃபெலோப்பியன் குழாய்களுக்குள் வரமுடியாது போய் விடுகிறது.இதனால் கர்ப்பம் ஆவது தடைபடுகிறது.ப்ரோஜெஸ்டிரான் என்ற ஹான்மோன் பற்றாகுறையே இதற்குக் காரணம்.

பஞ்சபூத சிகிச்சையின் மூலம் ப்ரோஜெஸ்டிரான் மற்றும் வேறு சில பெண் ஹார்மோன்களையும் சீராக சுரக்கச் செய்து செயல்பட வைக்க முடிகிறது.அதற்கு முதலில் பெண்ணின் உடல் சுத்தமாக வேண்டும்.

**தண்ணீர் சிகிச்சை:**
இன்ஃபெர்ட்டிலிட்டி, இர் ரெகுலர் மென்ஸ்ட்டுரேஷன் ஆகிய நோய்களின் தமிழ்ப் பகுதிகளில் தண்ணீர் சிகிச்சை விளக்கமாக தரப்பட்டு உள்ளது.அதைப் படித்து அறிக.

**மண் தத்துவ சிகிச்சை:**
மேற்கூறிய ஆங்கில வியாதிகளின் தமிழாக்கப் பகுதியின் மண் தத்துவ சிகிச்சை முறை விளக்கப் பட்டுள்ளன.அதில் காண்க:

**முக்கிய குறிப்பு:** சர்க்கரை வியாதிக்கான மருந்துகளைப் பெண்கள் உண்ட போது அவர்களின் ப்ரோஜெஸ்ட்டிரான் அளவு சீரானது.தவறான நவீன உணவுப் பழக்கத்தால் இவ்வாறு சிக்கல்கள் ஏற்படுகின்றன.எனவே முறையான நார்ச்சத்து உணவுகளை உண்ணும் போது பி.சி.ஓ.எஸ் மாறுகிறது.

**மிகப் பெரிய கட்டிகள் இருந்தால் என்ன செய்யலாம்?**
கை அளவு அருகம்புல்லை எடுத்துக் கொள்க.நன்றாக விழுதாய் அரைத்துக் கொள்க. அத்துடன் சீரகமும் பெரிய நெல்லிக்காயும் சேர்த்து அரைத்திடவும்.மூன்று கப் தண்ணீர் ஊற்றி அது ஒரு கப் அளவு சுண்டும் வரை இந்த விழுதுடன் சேர்த்துக் காய்ச்சவும்.இரவில் ஆற வைக்கவும்.காலையில் பல்துலக்கியவுடன் வெறும் வயிற்றில் இதைக் குடிக்கவும். ஒரு மணி நேரம் கழித்து ஒரு சிறுதுண்டு கற்றாழை ஊனை உண்ணவும்.பின்னர் காலை உணவை உண்க.ஓவரிகளில் பல கட்டிகள் இருப்பவருக்கும் இது மிக அற்புதமான மருந்து ஆகும்.

மாதவிடாய் காலமான ஐந்து நாட்களுக்கு இதை உண்ண வேண்டாம்.ஆறு மாதங்களுக்கு தினமும் ஒரு வேளை உண்டு வரவும்.

**இனி பின்வரும் மருந்துவகைகளைத் தயாரித்து உண்க:**
$. ***அதிக ரத்தப்போக்கு உள்ள போது என்ன செய்யலாம்?***

கைப்பிடி அளவு ஆவாரம்புக்களை எடுத்துக் கொள்க.அதன் பின் அதே அளவு முருங்கை இலைகளையும் கூட்டி அரை டீஸ்பூன் மஞ்சளுடன் அரைத்துக் கொள்க. இவற்றை வெறும் வயிற்றில் உண்க.பின் ஒரு கப் மோர் குடிக்கவும்.நாற்பத்தியோரு நாட்களுக்கு இவ்வாறு செய்து வரவும்.

$. வேக வைத்த ஊதாக் கத்தரிகாய்களை [ நாட்டுக் கத்தரிக்காய் ] மோருடன் சாப்பிட்டு வர ப்ரோஜெஸ்ட்டிரான் நன்கு சுரக்கும்.இரண்டு மாதங்களுக்கு இதை உண்க.

$. இரண்டு கிராம் வரப்பெருங்காயத்தை வறுக்கவும்.அத்துடன் பாலும் தேனும் கலந்து நாற்பத்தியோரு நாட்கள் குடித்து வர ப்ரோஜெஸ்ட்டிரான் சுரப்பது அதிகரிக்கும்.

$. வேக வைத்த அமராந்த் விதைகளை ஒரு கைப்பிடி தினமும் உண்டு வர ரத்தப்போக்கு நிற்கும்.

முக்கிய குறிப்பு:அறுபது நாட்கள் ரத்தப்போக்கு இருந்த எங்கள் தோழி ஒருத்திக்கு இதைச் சாப்பிட்டு இரண்டு மணி நேரத்தில் ரத்தப்போக்கு நின்றே விட்டது.

$. அரிசி உமியைப் பனங்கல்கண்டு உடன் சேர்த்து உண்டு வர ரத்தப்போக்கு நிற்கும்.

$. மருந்தடிக்காமல் வளர்ந்த செம்பருத்திச் செடியின் பூக்களை அரைத்து ஒரு கப் பாலுடன் கலக்கிக் குடித்துவர ரத்தப்போக்கு கட்டுப்படும்.

மேற்கொண்ட அனைத்து சிகிச்சைகளையும் மனமாறப் பின்பற்றி குணம் அடைக!

வாழ்த்துக்கள்!

நன்றி!